DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-163/2023
Prosecution witness – PW.3

| | | |
|---|---|---|
| Name | : திரு.சிவராமன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 present. A3, A4 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed)
09.02.2024– 02.20 PM

**சாட்சியை நிலைய முதல் நிலை பெண் காவலர்–171 அவர்கள் அடையாளம் காட்டினார்.**

முதல் விசாரணை

1. நான் கிடாத்திருக்கை கிராமத்தில் குடியிருந்து கொத்தனாராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்.

2. சுமார் 4 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் பொதிகுளம் கிராமத்திற்கு வேலைக்கு சென்றேன். அன்று இரவு தங்கிவிட்டு மறுநாள் ஊருக்கு வந்தேன்.

3. எங்கள் ஊர் கண்ணன் என்பவரது வீட்டின் அருகில் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது போலீசார் வந்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். யாரை விசாரித்தார்கள் என்று தெரியாது. என்னிடம் மூன்று பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். எதற்காக என்ற விபரம் எனக்குத் தெரியாது.

4. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். என் முன்பாக போலீசார் யாரையும் விசாரிக்கவில்லை. சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

5. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆகும். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆகும்.

6. அந்த வழியாக வந்த காளிமுத்து என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1. கடந்த 12.10.2022ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் அ.சா.1ன் வீட்டின் அருகில் இருந்தபோது போலீசார் இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த மகஜரில் நான் சாட்சியாக கையொப்பமிட்டதாகவும் சொன்னால் சரியல்ல.

2. அன்று 12.00 மணிக்கு 1வது எதிரியான காசிநாதன் என்பவரை பேரையூர் போலீசார் கிடாத்திருக்கை பேருந்து நிறுத்தம் ராசு என்பவரது இட்லிக்கடை அருகில் கைது செய்து விசாரித்ததாகவும், எதிரி எவ்வித அச்சுறுத்தலுமின்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பமிட்டதாக சொன்னால் சரியல்ல.

3. பின்னர் அன்று 13.15 மணிக்கு ராசு இட்லிக்கடை அருகில் வைத்து 1வது எதிரி வழக்கு சம்பவத்தில் பயன்படுத்திய TN 65 AU 1177 என்ற பதிவு எண் கொண்ட Hero Clamour என்ற இருசக்கர வாகனத்தை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார்கள் என்றும் அந்த அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

4. நான் தற்போது எதிரிகள் எனக்கு உள்ளூர்காரர்கள் மற்றும் உறவினர்கள் என்பதால் எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.